**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**DVC.No. 31/2023 PW .1**

| | | | |
|---|---|---|---|
| Name : மகேஸ்வரி | | Husband's Name | : பாண்டிமணிகண்டன் |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.05.2024

**3ம் எதிர்மனுதாரர் ஆஜர். மற்ற மனுதாரர்கள் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் மசாஆ. 1, மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமண அழைப்பிதழ் அசல் மசாஆ. 2, திருமண புகைப்படம் அசல் மசாஆ. 3, திருமண பதிவு சான்றிதழ் நகல் மாசாஆ. 4, நகைகள் விபரம் அடங்கிய சீர்வரிசை நோட்டின் பக்கம் நகல் மாசாஆ. 5, 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் அசல் மசாஆ. 6, 3ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் அசல் மசாஆ. 7, 1ம் மனுதாரரின் ஊதியத்தின் கணினி வழி ரசீது அசல் மசாஆ. 8, 1ம் மனுதாரரின் குடும்பத்தினரையும் அவரையும் அலைபேசியில் 1ம் எதிர்மனுதாரர் தரகுறைவாகவும், கொலை மிரட்டல் செய்த recording CD மசாஆ. 9, காரைக்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் ரசீது அசல் மசாஆ. 10, 1ம் மனுதாரரின் மருத்துவ அடையாள அட்டை நகல் மசாஆ. 11, மருத்துவம் பார்த்ததற்கான மருத்துவ OP.புத்தகம் நகல் மசாஆ. 12, 1ம் எதிர்மனுதாரர் பலமாக தாக்கியதில் 1ம் மனுதாரருக்கு கண்ணில் காயம் ஏற்பட்டு அதற்கு சிகிச்சை மேற்கொண்டதற்கான OP.புத்தகம் மற்றும் பாதிப்பு அடைந்த கண்ணின் புகைப்படங்கள் எண்ணிக்கை-4 நகல் மற்றும் அசல் மசாஆ. 13, நகை அடகு ரசீது நகல் மசாஆ. 14, 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள காரைக்குடி கணேசபுரத்தில் உள்ள வீட்டிற்கான மின்கட்டணம் ரசீது கணினி வழி அசல் மசாஆ. 15, 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள திருச்சி

திருவெறும்பூரில் உள்ள வீட்டின் பத்திர நகல் மசாஆ. 16. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.